**மண்முனை தென்எருவில் பற்று பிரதேச சபை**
**மட்டக்களப்பு மாவட்டம்**

---

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 நிதிக் கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 22 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2019 மே 30 ஆந் திகதி தவிசாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிதிக்கூற்றுக்களில் 2018 திசெம்பர் 31 இல் மண்முனை தென்எருவில் பற்று பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

1.3.1 கணக்கீட்டு கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்காக பின்பற்றப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கணக்கீட்டு கொள்கைகள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். | ஏதிர்வரும் வருடங்கள் பொதுத்துறை கணக்கீ நியமங்களுக்கு அமை தயாரிப்பதற்கு ஆலோசிக்கப்பட்டுள்ளது |

1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்கீட்டுக் குறைபாடுகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் இறுதிவரை பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் உள்ள 11 வட்டாரங்களில் களுதாவளை வட்டார பகுதியில் உள்ள 3,700 ஆதனங்களின் மீதான நிலுவை வீத வரி ரூபா 260,850 தொகையாக கணிப்பிடப்பட்டுள்ளது. இருந்தும், பிரதேச சபையினால் சமார்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 16(2) ஆம் பிவுகளுக்கமைய வீத வரிகள் முறையாக கணக்கிடப்பட்டு பட்டியல், அறவீடு மற்றும் நிலுவைகள் கணக்கிடப்பட்டு கணக்குக்கு கொண்டுவரப்பட வேண்டும் | எமது சபைக்குட்பட்ட களுதாவளை வட்டார பகுதியில் உள்ள 3700 ஆதனங்களுக்கான வீதவரி ரூபா 260,850 அறவிடப்படாத நிலுவையாக கணக்குகளில் காட்டப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டில் நிலுவை வீத வரிகளின் தொகை முறையாக கணிப்பிடப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்படாது நிலுவை பூச்சியமாக காட்டப்பட்டுள்ளது. | | |
| (ஆ) பிரதேச சபையினால் மீளாய்வாண்டில் 2016 ஆம் ஆண்டிற்கான முத்திரை தீர்வையானது ரூபா 16,740,721 தொகையில் கிழக்கு மாகாண திறைசேரியினால் நிர்வாக செலவுகளுக்கொன அறவிடப்பட்ட 1% சதவீதமான ரூபா 168,911 தொகை, மட்டக்களப்பு மற்றும் கல்முனையில் அமைந்துள்ள மாவட்ட உதவி காணிப் பதிவாளர் நாயகத்திற்கு செலுத்திய ரூபா 242,500 தொகை என்பவை செலுத்தப்பட்ட தாக கணக்குகளில் காட்டப்பட்டிருக் கவில்லை. | முழுமையான வருமானம் கணக்குகளில் காட்டப்பட்டு அவற்றின் மீதான கழிப்பனவுகளும் காட்டப்படுதல் வேண்டும் | பிரதேச சபைக்கான மொத்த முத்திரைத் தீர்வையின் கழிப்பனவு தொடர்பாக கணக்குகளில் குறிப்பாக காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது |
| (இ) பிரதேச சபைக்கு சொந்தமான 06 மோட்டார் வாகனங்கள் வண்டிகள் மற்றும் பிற அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்கு சொந்தமான 05 மோட்டார் வாகனங்கள் சபையினால் பயன்படுத்தப்பட்டுவருகின்றது. இவற்றுள் சபைக்கு சொந்தமான மோட்டார் வாகனங்கள் வண்டிகளின் பெறுமதிகள் 05 ஆண்டுகளுக்கு மேலாக கணிப்பீடப்படாது அல்லது மீள்மதிப்பிடப்படாது கணக்குகளில் ரூபா 13,147,425 தொகையாக காட்டப்பட்டுள்ளது. | மோட்டார் வாகனங்கள் வண்டிகள் மற்றும் பிற அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்கு சொந்தமான மோட்டார் வாகனங்கள் தொடர்பில் பதிவுகள் மற்றும் உரிமை மாற்றங்கள் செய்யப்பட்டு கணக்குகளுக்கு அதன் பெறுமதிகள் கொண்டுவரப்படவேண்டும். | எமது சபைக்கு சொந்தமான மோட்டார் வாகனங்களின் பெறுமதிரூபா 13,147,425.00 ஆகும். இதனுள் 2017ம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட துஊடீ இயந்திரத்தின் பெறுமதி ரூபா 11.5 மில்லியனும் உள்ளடக்கப்பட்டுள்ளது. ஆதலால் எமது சபைக்குரிய மற்றும் பிற திணைக்களின் பெயரிலுள்ள வாகனங்களுக்கு உரிமை மாற்றத்தினை மேற்கொள்வதுடன் பெறுமதியை மீள்மதிப்பீடு செய்து கணக்கிற்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தற்போது வாகனங்களுக்கான பெறுமதி மீள் மதிப்பிடப்பட்டுள்ளது. |
| (ஈ) மீளாய்வாண்டில் சபையின் முகப்பு அலுவலகத்தை உருவாக்க மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் ரூபா 450,240 தொகை பொறுமதியான 03 கணனித் தொகுதிகள் மற்றும் போட்டோ பிரதி இயந்திரம் போன்றவை நன்கொடையாக வழங்கப் பட்டபோதிலும், அவை கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | ரூபா 450,240 தொகை பொறுமதியான 03 கணனித் தொகுதிகள் மற்றும் போட்டோ பிரதி இயந்திரம் போன்றவற்றின் பெறுமதிகள் கணக்குக்கு கொண்டு வரப்படவேண்டும். | சபையின் Front office system இன் பாவனைக்காக உள்ளூராட்சி அமைச்சினால் வழங்கப்பட்ட கணணி மற்றும் பிறின்ரர் போன்றவற்றின் பெறுமதியினை கணக்குகளில் கொண்டுவருவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

1.3.3 நிகழத்தக்க பொறுப்புகள்

2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக சபையினால் 2011 திசெம்பர் 12 ஆம் திகதி வெளித்தரப்பினருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டிருந்ததுடன், அது தொடர்பாக தகவல்கள் நிதிக்கூற்றுக்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் பின்வருமாறு.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபையினால் 2009 ஜனவரி 19 ஆம் திகதிய கடன்அறவிட்டு ஒப்பந்தத்தற்கு அமைய, ரூபா 460,000 தொகை பெறுமதியான மீன்பிடி படகு மற்றும் அதன் இயந்திரம் என்பன வழங்கப்பட்டிருந்த போதிலும், அதற்கான அறவிடுகள் செலுத்தப்படாததினால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு வருகின்ற போதிலும், இதற்கான செலவுகள் நிகழத்தக்க பொறுப்பாக கணக்குகளில் காட்டப் படவில்லை. | நிகழத்தக்க பொறுப்புக்கள் கணக்கிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். | வழக்கு தாக்கல் தொடர்பான நட்டவீட்டு தொகையினை நிகழத்தக்க பொறுப்பாக கணக்குகளில் வெளிப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. |

1.3.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

(அ) பெற வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் நிலுவையாக உள்ள மின்சாரக் கடன்கள் ரூபா 1,656,338 தொகை தொடர்பில் தொடர்ச்சியாக பத்து ஆண்டுகளுக்கு மேலாக கணக்குகளில் காட்டப்பட்டுள்ள போதிலும், அவை தொடர்பான ஆவணங்கள், பதிவேடு மற்றும் உறுதிப்படுத்தக்கூடிய சான்றுகள் எதுவுமின்றி கணக்குகளில் காட்டப்பட்டு வருவதுடன் நிலுவைகளை அறவிட அல்லது ஏடுகளிலிருந்து பதிவழிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பெறவேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 1987ம் ஆண்டுக்கு முன்னர் பட்டின சபையாக காணப்பட்ட போது மின்சார சேவை நடவடிக்கைகளை பட்டின சபை வழங்கியிருந்தது. 1987ம்ஆண்டின் பின்னர் பிரதேச சபைகளாக மாற்றப்பட்ட போது மின்சார சேவையானது மின்சார சபையிடம் ஒப்படைக்கப்பட்டது. ஆனால் அக்காலப்பகுதியில் பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்பட்ட மின்சாரக் கட்டணம் தொடர்பான தகவல்களையும் மின்சார சபைக்கு வழங்கப்பட்ட முற்பணம் தொடர்பானபதிவேடுகள் விபரங்கள் இல்லாமையினால் அவற்றினை அறவீடு |

| | | |
|---|---|---|
| | | செய்வதற்கோ அல்லது ஏடுகளில் இருந்து பதிவழப்பதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ள முடியாதுள்ளது. |

(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் கடன் பெறுப்பாக காட்டப்பட்டுள்ள செலவுக் கடன் வழங்குனர் ரூபா 406,537 மற்றும் மின்சாரம் வினியோகித்த மைக்காக கடன் ரூபா 2,069,410 தொகைகள் ஐந்து வருடங்களுக்கு மேலாக இணங்கண்டு அவற்றை தீர்ப்பதற்கு அல்லது அவற்றை பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக் கவில்லை. | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்ப்பதற்கு அல்லது அவற்றை பதிவழ்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிதிக்கூற்றுக்களில் கடன் பெறுப்பாக காட்டப்பட்டுள்ள செலவுக் கடன் வழங்குனர் ரூபா 406,537 மற்றும் மின்சாரம் வினியோகித்த மைக்காக கடன் ரூபா 2,069,410 தொகைகள் ஐந்து வருடங்களுக்கு மேலாக இணங்கண்டு அவற்றை தீர்ப்பதற்கு அல்லது அவற்றை பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை . |

1.3.5 கணக்காய்விற்கு தேவையான எழுத்துமூல சான்றுகள் இல்லாதிருந்தமை

(அ) தகவல் சமர்ப்பிக்கப்படாமை

ரூபா 195,232,508 பெறுமதியான 06 கணக்கு விடயங்களுக்குரியதாக எதிரில் குறிப்பிடப்பட்டுள்ள சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த செய்ய முடியாதிருந்தது.

| கணக்கு விடயம் | பெறுமதி ரூபா | சமர்ப்பிக்கப்படாத சான்று | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (i) காணிகளும் கட்டிடங்களும் | 176,821,754 | காணி உறுதி, நிலையான சொத்துப் பதிவேடு | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப் பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | காணி கட்டடங்கள் பொறி, மோட்டார் வாகனங்கள் போன்ற நிலையான சொத்துக்களில் சிலவற்றுக்கான சான்றுகள் கிடைக்கப்பெற்றுள்ளதுடன் ஏனையவற்றுக்கான ஆவணங்களை பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மற்றும் மின்சாரம் விநியோகத்தமை மற்றும் செலவுக்கடன் வழங்குனர் போன்றவை தொடர்பான விபரங்கள் பெற்றுக்கொள்ளமுடியாதுள்ளது. |
| (ii) பொறி இயந்திரம் | 2,739,168 | சொத்துப் பதிவேடுகள் உரிமையை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் | | |
| (iii) மோட்டார் வாகனங்களும் வண்டிகளும் | 13,147,424 | சொத்துப் பதிவேடுகள் உரிமையை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் | | |
| (iv) மின்சார களஞ்சிய பொருட்களின் இருப்புக்கள் | 48,216 | இருப்புப் பதிவேடுகள் | | |
| (v) மின்சாரம் வினியோகித்தமைக்கான கடன்கள் | 2,069,410 | செலுத்த வேண்டிய பதிவேடு | | |
| (vi) செலவுக் கடன் வழங்குனர் | 406,536 | செலுத்தவேண்டிய கடன் பதிவேடு | | |

1.4 இணக்கமின்மைகள்

1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 12(1) மற்றும் (2) ஆம் பிரிவுகள் மற்றும் உள்ளூராட்சி வீடமைப்பு மற்றும் நிர்மாண வேலைகள் அமைச்சினது 1988 சனவரி 13 ஆம் திகதிய | பிரதேச சபைகளின் நடவடிக்கைகளை இலகுபடுத்தும் நோக்குடன் நிறைவான தீர்மானங்களை பெற்றுக் கொள்வதற்காகவு | உரிய விதிகளுக்கமைய நிலையிற்குழுக்கள் அமைக்கப்பட்டு அவை உரிய முறையில் செயற்படுத்தப்பட்டு ஆலோசனைகள் வழங்கப்பட வேண்டும் | சபையின் நடவடிக்கைகளை இலகுபடுதத்துவதற்காக உருவாக்கப்பட்ட குழுக்கள் செயலாற்றம் பெறுவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| 488/16 ஆம் இலக்க வர்த்மான அறிவித்தலின் 31(1) ஆம் உப பிரிவு | ம் சபையில் நிதி, கொள்கைத் திட்டமிடல், வீடமைப்பு, சமூக அபிவிருத்தி, தொழிநுட்பச் சேவைகள், சுற்றாடல் மற்றும் பொது வசதிகள் போன்ற விடயங்களுக்காக தனித்தனி குழுக்கள் 2015 மே மாதம் நியமிக்கப்பட்டிருந்த போதிலும், அக் குழுக்களை செயற்படுத்துவதற்கு 2016 யூலை 25 ஆந் திகதி வரை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிருவாக விதிகள் அத்தியாயம் X இன் பிரிவு 193 | மீளாய்வாண்டிற்கான உள்ளபடியான வருமானம் மற்றும் செலவு தொடர்பான விபரங்கள் வரவு செலவுத் திட்டத்துடன் ஒப்பிடப்பட்டு முரண்பாட்டுக்கான விளக்கங்களை உள்ளடக்கிய கூற்று தயாரிக்கப்பட்டு கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கூற்றுக்கள் உரிய காலத்தில் தயாரிக்கப்பட்டு கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வரவு செலவுத் திட்டத்திற்கும் உண்மையான கிடைப்பனவுக்குமான அறிக்கை, காரணங்கள் என்பவற்றை உள்ளடக்கி அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

1.4.2 வரித் தேவைப்பாடுகளுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) உள்நாட்டு இறைவரி திணைக்களத்தால் வெளியிடப்பட்ட 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதி சேர்க்கப்பட்ட வரி சட்டத்தின் 20 ஆம் பிரிவு மற்றும் பெறுகைகள் வழிகாட்டி | உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் சட்ட ஏற்பாடுகளுக் கமைய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | VAT வரிகள் தொடர்பான விபரங்கள் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கும், கணக்காய்வாளர் தலைமை |

5.4.11 பிரிவுகளில் தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில் ஒரு வழங்குனர் அல்லது ஒப்பந்தக்காரர் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி கோருகின்ற போது அவரால் ''வற் பற்றுச்சீட்டு'' (VAT Invoice) சமர்ப்பிக்குமிடத்து அவருக்கு பெறுமதி சேர்க்கப்பட்ட வரி செலுத்தமுடியும். மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களின் வெவ்வேறுபட்ட வழங்குனர்களுக்கு ரூபா 108,548 தொகை பெறுமதி சேர்க்கப்பட்ட வரியாக கொடுப்பனவு செய்யப்பட்ட போதிலும், அவ்வழங்குனர்களிடமிருந்து ''வற் பற்றுச்சீட்டு'' (VAT Invoice) பெறப்பட்டிருக்கவில்லை. அத்துடன் செலுத்தப்பட்ட பெறுமதி சேர்க்கப்பட்ட வரி தொடர்பில் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கும் கணக்காய்வாளர் தலைமை யதிபதிக்கு தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை.

அதிபதிக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 20,586,408 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 10,691,626 தொகையாக ஆக இருந்தமை நிதிவிளைவுகளில் ரூபா 9,894,782 முன்னேற்றத்தை காட்டுகின்றது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான மூலம் | 2018 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2018 பட்டியலி டப்பட்ட வருமானம் | 2018 சேகரிக்கப் பட்ட வருமானம் | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | 2017 மதிப்பிடப் பட்ட வருமானம் | 2017 பட்டியலி டப்பட்ட வருமானம் | 2017 சேகரிக்கப் பட்ட வருமானம் | 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 1,200,000 | 1,828,310 | 1,828,310 | --- | 762,000 | 1,435,800 | 874,750 | 561,050 |
| வாடகைகள் | 15,174,400 | 18,556,129 | 14,753,576 | 3,802,553 | 15,374,400 | 19,019,207 | 13,609,625 | 5,409,582 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,250,000 | 2,412,093 | 1,617,020 | 795,073 | 8,125,000 | 2,139,760 | 8,659,943 | 6,520,183 |
| ஏனைய வருமானம் | 62,955,640 | 45,988,563 | 36,178,461 | 9,810,102 | 12,250,000 | 30,812,247 | 14,755,443 | 16,056,804 |

2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) நீண்ட காலமாக காணப்படும் வாடகைகள் மீதான நிலுவை ரூபா 3,802,553 தொகைகயை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாடகைகள் மீதான நிலுவை ரூபா 3,802,553 தொகைகயை அறவிட நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும் | 1985ம் தொடக்கம் 2011ம் ஆண்டுவரையான காலபப்பகுதிக்கான வாடகை நிலுவை ரூபா 3,802,553 நீண்டகாலமாக காணப்படுகின்றது. இதற்கான காரணம் 1985 தொடக்கம் 2009 வரையான காலப்பகுதியில் நாட்டில் காணப்பட்ட அசாதாரண சூழ் நிலைகாரணமாக அவற்றினை அறவிட முடியாது விடப்பட்டுள்ளது. எனினும் இவை தொடர்பாக பல தடவைகள் உரியவர்கட்டு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டும் எவ்விதமான முன்னேற்றமும் ஏறப்டவில்லை. எனினும் 2018ம் ஆண்டு காலப்பகுதியில் ரூபா. 245,000 அறவீடு செய்யப்பட்டுள்ளது. |
| (ஆ) மீளாய்வாண்டில் முத்திரை தீர்வையானது 2016 ஆம் ஆண்டிற்கான வருமானத்தையே அறவிட்டுள்ளது. இருந்தும், சபையானது 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுக்கான பெறவேண்டிய வருமானத்தை கணக்குகளில் காட்டததுடன், உரிய காலத்திற்குள் அதனை அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | முத்திரை தீர்வையினை மீளாய்வாண்டிலே அறவிட நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | 2017ம் ஆண்டுக்கான தொகையை கணக்குகளில் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

2.2.3 வீதவரி மற்றும் வரி

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் 11 வட்டாரங்களில் 15 கிரமங்கள் காணப்பட்ட போதிலும், 2016 தொடக்கம் 2018 வரையான ஆண்டு காலப்பகுதியில் 06 | பிரதேச சபையின் கட்டளைகள் சட்டங்களுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும் | அ) எமது பிரதேச சபைக்குட்பட்ட 11 வட்டாரங்களில் 15 கிராமங்கள் காணப்பட்ட போதிலும் தற்போது 06 கிராமங்களுக்கு சோலைவரி மதிப்பீடு செய்யப்பட்டு |

| | | |
|---|---|---|
| கிரமங்களுக்கு மாத்திரம் சோலைவரி மதிப்பீடு செய்யப்பட்டு சோலை வரிகள் அறவிடப்படுகின்றன. சபையின் கீழ் உள்ள ஏனைய 09 கிரமங்களுக்கு சோலைவரி அறவிடு செய்வதற்குரிய நடவடிக்கைகள் சபையால் மந்தநிலையில் மேற்கொள்ளப்படுகின்றன. | | அறவிடப்பட்டு வருகின்றன. ஏனைய 09 கிராமங்களுக்கான சோலைவரி அறவீடு செய்வதற்குரிய தீர்மானம் நவம்பர் மாதத்தில் எடுக்கப்பட்டு உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு பிரேரணையாக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) சோலைவரி அறவிடுவதற்காக வருடாந்தம் சபையினால் ஆதன உரிமையாளர்களுக்கு வழங்கப்படுகின்ற “K” படிவத்தில், கட்டணங்களை முன்கூட்டி செலுத்தும் உரிமையாளர்களுக்கு சோலைவரி மீதான கழிவு வழங்கப்படுமென குறிப்பிடப்பட்டுள்ளது. இருந்தும், இப் படிவங்கள் குறித்த காலம் நிறைவேறிய பின்னரே உரிமையாளர்களுக்கு வழங்கப்படுவதினால் சோலைவரி மீதான கழிவினை உரிமையாளர்கள் இழந்துவிடவேண்டிய நிலை ஏற்படுகின்றது. | பிரதேச சபையின் கட்டளைகள் சட்டங்களுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும் | சோலைவரியினை உரிய காலப்பகுதில் நடைமுறைப்படுத்துவதற்கான ஆளணி தற்போது பற்றாக்குறையாக உள்ளது.. சோலை வரி அறவிடுவதற்கான வரி இறுப்பாளர்கள் என்ற பதவிக்கான ஆளணி அனுமதி செய்யப்படவில்லை. ஆகையால் எமது சபையில் கடமையாற்றும் 04 அமைய ஊழியர்களைக் கொண்டே அறவீடு செய்யப்பட்டு வருகின்றது. இதனால் உரிய காலப்பகுதியில் “K”form வழங்கமுடியாதுள்ளது. |
| (இ) பிரதேச சபையினால் சமார்ப்பிக்கப்பட்ட 2018 அம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்ட பொழிப்பில் வீதவரிகள் மற்றும் வரிகள் தொடர்பில் ரூபா 1,200,000 தொகை வருமானமாக பெறமுடியும் என காட்டப்பட்டள்ளது.இருந்தும், மீளாய்வாண்டில் உண்மையாக அறவிடப்படவேண்டிய நிலுவை வருமானம் அடங்கலாக அண்ணளாவாக ரூபா 1,400,000 தொகையை விட கூடதலாக அறவிட முடியும் என ஆவணங்கள் மற்றும் பதிவேடுகள் சுட்டிக்காட்டுகின்றன. | பிரதேச சபையின் கட்டளைகள் சட்டங்களுக்கு அமைய அறவிடு செய்வது தொடர்பான புதிய நூட்பங்களை அறிமுகம் செய்து நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும் | 2018ம் ஆண்டு வீதவரி அறவிடுவதற்காக உத்தேசிக்கப்பட்ட தொகை ரூபா 1,200,000 ஆகும் இருந்தும் மீளாய்வாண்டில் உண்மையாக அறவிடப்பட வேண்டிய நிலுவை உள்ளடங்கலாக அண்ணளவாக ரூபா 1.400,000.00 தொகையை விட கூடுதலாக அறவீடு செய்யலாம் எனக்குறிப்பிடப்பட்டள்ளது. ஆனால் 2018ம் ஆணடில் எதிர்பார்க்கப்பட்ட தொகையை விட கூடுதலாக ரூபா 1,828,310.00 அறவீடு செய்யப்பட்டுள்ளது. |

2.2.4 ஏனைய வருமானம்

JCB இயந்திரத்தின் பயன்பாடு

தங்கள் பிரதேச சபையினால் உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் (LLDF) கீழ் JCB இயந்திரம் ஒன்றை கொள்வனவு செய்வதற்காக 2017 பெப்பரவரி மாதத்தில் மேற்படி நிதியத்துடன் ஒப்பந்தம் செய்து குறித்த இயந்திரத்தை கொள்வனவு செய்தது. இவ்வியந்திரத்தன் பயன்பாடு தொடர்பான விடயங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) பிரதேச சபையினால் இவ்வியந்திரத்தை கொள்வனவு செய்வதற்கு போதிய நிதி இன்மையால் சபையானது உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் கீழ் கடன் பெற்று, JCB இயந்திரத்தை கொள்வனவு செய்ய முடிவெடுக்கப்பட்டு சபை நிதியில் ரூபா 2,300,000 தொகை மற்றும் கடன் நிதியின் மூலம் ரூபா 9,200,000 தொகையும் கொண்டு ரூபா 11,500,000 தொகைக்கு சபையின் வருமானத்தை அதிகரிக்கும் நோக்குடன் இவ்வியந்திரம் கொள்வனவு செய்யப்பட்ட போதிலும், சபையானது இவ்வியந்திரத்தை பயன்படுத்துவதன் மூலம் நட்டத்தையே எதிர்நோக்கியுள்ளது. | இவ்வாறான இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்படும் போது எதிர்காலத்தில் சபைக்கு கிடைக்கும் வருமானம் அவற்றின் மூலமான அபிவிருத்திகள் தொடர்பில் ஆய்வு செய்து கொள்வனவு செய்தல் சிறந்தது. | JCB ,யந்திரமானது எமது சபையின் ஒப்பந்த வேலைக்கும். வெள்ளப்பெருக்கு போன்ற அசாதாரண சூழ் நிலைகளின் போதும் மற்றும் சபையின் வருமானத் தினை அதிகரிக்கும் நோக்குடனே கொள்வனவு செய்யப்பட்டது. இதன் மூலம் சபையினால; எதிர் பார்க்கப்பட்ட வருமானத்தினை உழைக்க முடியா துள்ளது. அதற்கான காரணம் 2017ம் ஆண்டில் புதிதாக தனியார் நிறுவனம் குறைந்த கட்டணத்தில் வழங்குவதற்கு போட்டியாக உருவாகியமையாகும். ஆகையால் எதிர்பார்க்கப்பட்ட வருமானத்தை பெறமுடியாதுள்ளது. |
| (ஆ) பிரதேச சபைக்கு வருமானத்தை உழைக்கும் நோக்குடன் கொள்வனவு செய்யப்பட்ட இவ்வியந்திரத்தின் மூலம் சபை வேலைகள் உட்பட பாடசாலைகள், மதஸ்தலங்கள், பொதுநிறுவனங்கள் மற்றும் அரச திணைக்களகங்களுக்கென 383.40 இயந்திர மணித்தியாளங்கள் இச்சேவையை இலவசமாக வழங்கியுள்ளதினால் ரூபா 1,150,200 தொகையை இழந்துள்ளது. | இலவசமாக வழங்குவதன் மூலம் எற்படும் நட்டத்தை ஈடுசெய்வதற்கான எற்பாடுகளை கவனத்தில் கொள்ளவேண்டும் | துஊடீ இயந்திரம் வருமானத்தை உழைப்பதை நோக்கமாக கொண்டு கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. ஆனால் சபையானது இலவலசமாக பாடசாலை, பொதுநிறுவனங்கள் மற்றும் மதஸ்தலங்கள் போன்றவற்றுக்கு வழங்குவதனை தவிர்க்க முடியாதுள்ளது. தற்போது |

| | | |
|---|---|---|
| | | பாடசாலை, மதஸ்தலங்கள் பொது நிறுவனங்கள் அரச திணைக்களங்களுக்கு மணித்தியாலயம் ஒன்றிற்கு ரூபா. 1,500.00 வீதம் அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. |
| (இ) பிரதேச சபையானது மீளாய்வாண்டில் இவ்வியந்திரத்தினை 940.5 இயந்திர மணித்தியாளங்கள் பயன்படுத்தியுள்ளன. இதனடிப்படையில் எரிபொருள், இயந்திர திருத்தம், சாரதி சம்பளம் மற்றும் இயந்திரத்தின் கடன் மீளச்செலுத்தல் என்பன அடங்கலாக ரூபா 4,681,818 தொகை செலவிடப்பட்டுள்ளது. சபை வேலைகள் தவிர்ந்த ஏனைய வேலைகளுக்காக இவ்வியந்திரம் 557.15 இயந்திர மணித்தியாளங்கள் பயன்பத்தப்பட்டதினால் ரூபா 1,671,450 தொகையை மாத்திரம் உழைத்துள்ளது. இச்செயற்பாட்டினை ஆய்வு செய்தால் வருடாந்தம் சபையானது ரூபா 2,500,000 தொகையை அண்ணளவாக இழக்கவேண்டி ஏற்படலாம். | வருமானங்களை கருத்தில் கொள்ளப்படவேண்டும் | JCB ,யந்திரத்தின் மீதான செலவுகள் அதாவது இயந்திரத்திருத்தம். சாரதி சம்பளம், எரிபொருள் மற்றும் இயந்திரக் கடன் அதிகமாக காணப்படுகின்றது. இயந்திரத்திற்கான கடன் தொகையானது ஒரு நீண்டகால முதலீடு ஆகும். ஏனெனில் அது ஒரு சொத்தாக சபையில் காணப்படும். ஏனைய செலவுகள் ஏற்படுவதனை தவிர்க்க முடியாது. நீண்ட்காலத்தில் இலாபத்தினை உழைக்க கூடியதாக இருக்கும்.. |

### 2.2.5 முத்திரைக் கட்டணங்கள் மற்றும் நீதிமன்ற தண்டப்பணம்

மாகாண சபையின் பிரதம செயலாளர் மற்றும் அனைத்து அதிகாரிகளிடமிருந்து 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 8,005,554 தொகையான நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் ரூபா 28,207,248 தொகையான முத்திரைக் கட்டணங்கள் பெறப்பட வேண்டியிருந்தன.

#### முத்திரைக் கட்டணங்கள்

பிரதேச சபை அதிகார எல்லைக்குள் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அசைவற்ற காணிகள் கைமாற்றல்கள் மீதான முத்திரைத் தீர்வையை மட்டக்களப்பு மற்றும் கல்முனையில் அமைந்தள்ள மாவட்ட காணிப் பதிவாளர் திணைக்களத்தால் சேகரிக்கப்பட்டு கிழக்கு மாகாண திறைசேரியின் வருமானவரித் திணைக்களத்திற்கு செலுத்தப்பட்ட முத்திரை தீர்வையை உள்ளூராட்சி சபைகள் பெற்றுக்கொள்வது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) கிழக்கு மாகாண சபையின் 2010 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க முத்திரை தீர்வை மாற்றல்கள் பிரிவு 03 இற்கு அமைய வருடாந்தம் முத்திரைத் தீர்வை அறவிடப்படவேண்டிய | முத்திரைத் தீர்வைகள் பிரதேச சபையினால் கணக்கிடப்பட்டு பதிவாளர் நாயகத்திடமிருந்து உரிய காலத்திற்குள் அறவிட நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். | உரிய காலப்பகுதியில் அறவிட நடவடிக்கை எடுக்கப்படும் |

| | | |
|---|---|---|
| போதிலும், 2018 ஆம் ஆண்டு ஜனவரி தொடக்கம் திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்குரிய முத்திரைத் தீர்வைகள் பிரதேச சபையினால் கணக்கிடப்பட்டு பதிவாளர் நாயகத்திடமிருந்து உரிய காலத்திற்குள் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) கிழக்கு மாகாண இறைவரித் திணைக்களத்தால், கிழக்கு மாகாண சபைகள் 2008 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க வரிகளையும் கட்டளைகளையும் விதிப்பதற்கும் சேகரிப்பதற்குமான நிதிநியதிச் சட்டத்தின் 37 ஆம் சரத்துக்கமைய சபையின் அதிகார எல்லைக்குள் உள்ள அசைவற்ற ஆதனங்களை மாற்றுகையில் கிழக்கு மாகாண இறைவரித் திணைக்களத்தினால் 2016, 2017 மற்றும் 2018 திசெம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் நேரடியாகவும் நடமாடும் சேவைகள் மூலமாகவும் அறவிட்ட மேலதிக முத்திரை தீர்வை தொடர்பில் ஆதன உரிமையாளர்களால் கிழக்கு மாகாண இறைவரி திணைக்களத்திற்கு செலுத்தப்பட்ட முத்திரை தீர்வை கணக்கிடப்பட்டு அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கிழக்கு மாகாண சபைகள் 2008 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க வரிகளையும் கட்டளைகளையும் விதிப்பதற்கும் சேகரிப்பதற்குமான நிதிநியதிச் சட்டத்தின் 37 ஆம் சரத்துக்கமைய முத்திரைத் தீர்வைகள் பிரதேச சபையினால் கணக்கிடப்பட்டு பதிவாளர் நாயகத்திடமிருந்து உரிய காலத்திற்குள் அறவிட நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். | இவ்விடயம் தொடர்பான தகவல்கள் பெறப்பட்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது |

3. செயற்பாட்டு மீளாய்வு
-------------------------------------

3.1 செயலாற்றல்
---------------------

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம், பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வழிகள், மற்றும் மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

(அ) உப விதிகள்

| அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 1987 ஆம் ஆண்டின் 15 இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் பிரகாரம், பிரதேச சபையின் வருமானம் மற்றும் ஒழுங்கமைப்புக்காக 13 முக்கிய விடயங்கள் தொடர்பில் உபவிதிகள் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டிருக்க வேணடும். இருந்தம், பிரதேச சபையினால் 2012 ஆகஸ்ட் 04 ஆம் திகதியில் சபையினால் உப விதிகள் தொடர்பான பிரேரணைகள் கிழக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சரின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்ட போதிலும், 2018 திசெம்பர் 31 வரையிலும் அவற்றிக்கான அனுமதியைப் பெற்று நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | 1987 ஆம் ஆண்டின் 15 இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 ஆம் பிரிவின் பிரகாரம், உபவிதிகள் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படத்த வேணடும். | எமது சபையினால் 2012 ஆகஸ்ட் 04ந் திகதியில் சபையினால் உபவிதிகள் தொடர்பான பிரேரணைகள் கிழக்கு மாகாண அமைச்சரின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. அதன் பின்னர் சபை 2013 ஆண்டு காலப்பகுதியில் கலைக்கப்பட்டுள்ளது. எனினும் அதனை அங்கீகரிக்காது அமைச்சின் பொறுப்பாகும். தற்போது உபவிதிகள் தொடர்பாக சபையின் அனுமதியுடன் பிரேரணைகள் நிவைேற்றப்பட்டு அமைச்சரின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. |

(ஆ) செயல் நடவடிக்கைத் திட்டம்

| அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 1987 ஆம் ஆண்டின் 15 இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் பிரகாரம், பிரதேச சபையின் வருமானம் மற்றும் ஒழுங்கமைப்புக்காக 13 முக்கிய விடயங்கள் தொடர்பில் உபவிதிகள் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படத்தப்பட்டிருக்க வேணடும். இருந்தும், அனுமதி பெறவதற்காக தயாரிக்கப்பட்ட உப விதிகளின் பிரகாரம் சபையினால் செயல்படுத்தப்பட்டிருக்க வேண்டிய 13 செயற்பாடுகள் தொடர்பில் வருடாந்த செயல்நடவடிக்கைத் | 1987 ஆம் ஆண்டின் 15 இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 ஆம் பிரிவின் பிரகாரம், உபவிதிகள் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படத்த வேணடும். | எமது சபைக்கான உபவிதிகள் உள்ளூராட்சி அமைச்சரின் அங்கீகாரம் கிடைக்கப் பெறாமையினால் அது தொடர்பாக வருடாந்த செயல் திட்டம் நடவடிக்கை தயாரிக்கப்படாமல் 1985ம் ஆண்டின் 35ம் இலக்க பிரதேச சபை சட்டத்திற்கு அமைய செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |

திட்டமொன்று
தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிராமை

| அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக சபையினால் சபை நிதி மற்றும் கிழக்கு மாகாண குறித் தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை திட்ட நிதி என்பவற்றை அடிப்படையாக வைத்து தயாரிக்கப்பட்ட வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், சபையினால் செயற்படுத்தப்பட்டிருக்க வேண்டிய 22 செயற்பாடுகளில் 11 செயற்பாடுகளுக்கு மாத்திரம் மீளாய் வாண்டில் செயற்படுத்த திட்டமிடப்பட்டிருந்தது ஏனைய செயற்பாடுகள் சபையின் பரிந்து ரைக்கமைய, மாற்றப்பட்டு மேற்கொள்ளப் பட்டிருந்தது. இதனால் மக்களுக்கு தேவையென அடையாளப்படத்தப்பட்டு முன் மொழியப்பட்ட 11 செயற்திட்டங்கள் செயற்பாடுகள் செயற்படுத்த முடியாதிருந்தது. | புதிய திட்டங்கள் உள்வாங்கப்பட்டு நடைமுறைப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | 2018ம் ஆண்டிற்கான வருடாந்த செயற்திட்டம் 2017ம் ஆண்டு தயாரிக்கும் போது பிரதேச சபைக்கான உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட வில்லை. 2018ம் ஆண்டு சபை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட பின்பு இத்திட்டத்தில் பல மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டதுடன் சபையின் அனுமதி மூலம் புதிய திட்டங்கள் உள்வாங்கப்பட்டு நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது. இதன் காரணமாக பல திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட முடியாமல் விடப்பட்டுள்ளது. |

(ஈ) திண்மக் கழிவு முகாமைத்துவம்

திண்மக் கழிவு முகாமைத்தும் தொடர்பில் சபையினால் மேற்கொள்ளப்பட்ட நீண்டகால மற்றும் குறுங்கால செயற்திட்டங்களுக்கென மீளாய்வாண்டில் ரூபா 4,752,654 தொகை செலவினம் மேற்கொள்ளப்பட்ட போதிலும், சபையின் வருமானமாக ரூபா 1,152,040 தொகை பெறப்பட்டுள்ளது. இவ் திண்மக் கழிவு முகாமைத்தவம் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) சபையினால் திண்மக்கழிவு முகாமைத்துவத்திற்கென ஐந்தாண்டு திட்டம் 2016 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்டு, அப்போது செயற்பட்டு வந்த சபையினால் அங்கீகரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டிருந்த போதிலும், இத் திட்டத்தின் ஊடாக முன்மொழியப்பட்ட திட்டங்களில் தேவையான சாரதிகள், திண்ம கழிவுகளை சேகரிப்பதற்கான வாகனங்கள், சுகாதார தொழிலாளிகள் | கிராமங்களில் சுற்றுச் சூழல் பாதுகாப்பு குழுக்களை உருவாக்கி சபையின் கட்டுப்பாட்டிலுள்ள சனசமூக நிலையங்கள் ஊடாக இதனை நடைமுறைப்படுத்தல். | திண்மக்கழிவு முகாமைத்துவத்திற்கு தேவையான ஆளணி விபரங்கள் தயாரிக்கப்பட்டு உள்;ராட்சி உதவி ஆணையாளர் ஊடாக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அத்துடன் திண்மக்கழிவு சேகரிப்பதற்கு |

| | | |
|---|---|---|
| போன்றவற்றை அதிகரித்தல் மற்றும் கிராமங்களில் சுற்றுச் சூழல் பாதுகாப்பு குழுக்களை உருவாக்கி அதன் ஊடாக திண்மக்கழிவு முகாமைத்துவத்தை அபிவிருத்தி செய்யும் திட்டங்கள் இதுவரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | தேவயையான வாகனங்களுக்கான கோரிக்கை உள்ளூராட்சி அமைச்சிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. மேலும் கிராமங்களில் சுற்றுச் சூழல் பாதுகாப்பு குழுக்களை உருவாக்குவற்கு பதிலாக எமது சபையின் கட்டுப்பாட்டிலுள்ள சனசமூக நிலையங்கள் ஊடாக இதனை நடைமுறைப்படுத்தி வருகின்றோம். |

(உ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகளின் அமைப்பின் அங்கத்துவ நாடுகளின் அரச தலைவர்களின் தலைமையில் 2015 ஆம் ஆண்டு நிலைபேறான அபிவிருத்தி மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டதன் பிரகாரம் சபையினால் 2030 ஆம் ஆண்டில் அடைந்து கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் தொடர்பாக அளவிடுவதற்கான குறிகாட்டிகளை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2015 ஆம் ஆண்டு நிலைபேறான அபிவிருத்தி மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டதன் பிராகாரம் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் | நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகள் அமைச்சரவையில் தீர்மானிக்கப்பட்ட குறிக்கோள்களை அடைவதற்கான குறிகாட்டிகள் உருவாக்கப்படவில்லை. ஆனால் அதற்கான செயற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். வைத்தியஅதிகாரியுடன் தொடர்பு கொண்டு தாய் சேய் நலன் பேணுவதற்கு கர்ப்பிணி தாய்மார்களுக்கான சத்துணவு திட்டம், உணவகங்களில் பயன்படுத்தும் தண்ணீர் தொடபான பரிசோதனை செய்து நடவடிக்கை எடுக்கின்றோம், டெங்கு மற்றும் சுத்தமான சூழலினை பேணுவதற்கான நடவடிக்கை, வறுமைமட்டத்தில் உள்ள மாணவர்கட்கு |

| | | |
|---|---|---|
| | | இலவச கல்வி வசதி வழங்கப்படுகின்றது.. |

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

(i) முகப்பு அலுவலகம் ஒன்றினை உருவாக்கல்

| அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் உதவியுடன் முகப்பு அலுவலகம் ஒன்றினை உருவாக்கி பிரதேச சபையயின் அதிகார எல்லைக்கு உட்பட்ட மக்களுக்கு இலகுவாக உதவும் பொருட்டு உள்ளூராட்சி தகவல்கள், சபையின் தகவல்கள், அபிவிருத்தி தகவல்கள் மற்றும் அனர்த்தம் தொடர்பான உதவிகளை செய்யும் பொருட்டு அவ் அலுவலகம் ஒன்றை அமைப்பதற்கு ரூபா 450,240 மற்றும் சபை நிதியிலிருந்து ரூபா 180,000 தொகைகளுக்கு அலுவலக உபகாரணங்கள் மற்றம் கருவிகள் கொள்வனவு செய்வதற்காக செலவிடப்பட்டிருந்தது. இருந்தும், சபையினால் கணக்காய்வுத் திகதியான 2019 மார்ச் 31 ஆம் திகதிவரை முகப்பு அலுவலகம் உருவாக்கப்பட்டிருக்காததுடன், அத்தளபாடங்கள் மற்றும் கருவிகள் அலுவலகத்தின் பிரிதொரு தேவைக்காக பயன்படுத்தப்படுகின்றது. | நடப்பு ஆண்டில் செயற்படுத்த நடவடிக்கைகள மேற்கொள்ளப்பட வேண்டும். | சபையில் முகப்ப அலுவலகத்தினை அமைப்பது தொடர்பாக மீளாய்வாண்டில் பொறுப்பேற்றுக் கொண்ட சபையினால் உடனடியாக செயற்படுத்த முடியாது போய்விட்டது. அது தொடர்பாக நடப்பு ஆண்டில் செயற்படுத்தப்படவுள்ளது. |

(ii) லீவு பதிவேடு பாவனை

| அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையில் கடமைபுரியும் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் தொடர்பில் பேணப்பட்டுவருகின்ற லீவு பதிவேடுகளை கணக்காய்வு செய்த போது அவ் ஊழியர்களின் லீவுப் பதிவேடுகளில் காலகடந்த லீவுகள் தொடர்பான பதிவுகள் மேற்கொள்ப்பட்டிருக்கவில்லை. இதனால் ஒரு உத்தியோகத்தரின் காலம் கடந்த லீவுகள் தொடர்பான தகவல்களை உடன் பெற்றுக்கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது. | முறையாக லீவுகள் பதிவு செய்யப்படவேண்டும் | சபையின் லீவு பதிவேட்டில் காலம் கடந்த லீவு விபரத்தினை பதிவ செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

3.3 நட்டங்கள் மற்றும் சேதங்களினை அறவிடுவதற்கு தவறியமை

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபைக்கு சொந்தமான பொதுச் சந்தையிலுள்ள 12 கடைகளுக்கான நிலுவை மின்சாரக் கட்டணத்தை 2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் இக் கடைகளை பெற்ற நபர்கள் மீளாய்வாண்டு வரை செலுத்த தவறியதனால் சபைக்கு ஏற்பட்ட இவ் நட்டத்தை உரிய நபர்களிடமிருந்து அறவிடாது இவ்நிலுவை ரூபா 591,317 தொகையை சபையானது மின்சாரசபைக்கு செலுத்தியதானால் இத் தொகை சபைக்கு நட்டமாக காணப்படுகின்றது. | இனிவரும் காலங்களில் இவ்வாறான தவறுகள் ஏற்படாது சபையின் தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டும் | களுவாஞ்சிக்குடி பொதுச்சந்தையின் மேல்மாடியிலுள்ள 12 கடைகள் நீண்ட காலமாக வாடகைக்கு வழங்கப்ப டாதுள்ளது. அதற்கான மின் மாணி பாவனைக்குட்படாததால் அதற்கான மீற்றர் வாடகையாக குறிப்பிட்ட தொகை கணக்கிடப்பட்டுள்ளது. தற்போது புதிதாக நிர்மாணிக்கப்பட்ட 21 கடைகளுக்கான புதிய மின்இணைப்பினை பெற்றுக் கொள்வதற்கு ஏற்படும் செலவினத் தொகையினை விட குறிப்பிட்ட வாடகைத் தொகை செலுத்தி அதனை புதிய கடைகளுக்கு இணைப்பினை பெற்றுக்கொள்வது இலாபகரமானதாக காணப்பட்டமையினால் செலுத்தப் பட்டள்ளது. இதனை செலுத்துவதற்கான அனுமதி உள்ளூராட்சி உதவி ஆணையாளரிடமிருந்து பெறப்பட்டுள்ளது. |

3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) சோலைவரி அறவிடுவதற்காக வருடாந்தம் சபையினால் ஆதன உரிமையாளர்களுக்கு ‘‘K’’ படிவம் அனுப்பி வைக்கப்படவேண்டும். 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 134 ஆம் பிரிவுக்கு அமைய, பிரதேச சபையின் | இச்செயற்பாடுகள் தொடர்பாக முறையான திட்டமிடல் ஒன்று மேற்கொள்ளப்பட்டு சேவைகளை மக்களுக்கு | 2018ம் ஆண்டுக்கான சோலைவரி அறவிடுவதற்கான வரி சேகரிப்பாளர் எண்ணிக்கை 04 ஆகும். ஆகையால் சோலை வரி தொடர்பான விண்ணப்பப்படிவங்களை |

| | | |
|---|---|---|
| அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் உள்ள காணிகள் மற்றும் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள், கட்டிடங்கள் என்பவற்றின் கூறிப்பிடப்பட்டுள்ள போதிலும், 2018 ஆம் ஆண்டிற்கான சோலை வரி கட்டணப்படிவங்கள் 2018 ஜனவரி மாதத்திற்கு பின்னரே ஆதன உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டுவருகின்றது. | வழங்கவேண்டும் | வழங்குதல், வரியினை அறவிடுதல், மு படிவம் வழங்குதல் போன்ற விடயங்களை 04 வரி சேகரிப்பாளர்களே மேற்கொள்ள வேண்டியுள்ளது. ஆகையினால் ஆளணி பற்றாக்குறை காரணமாகவே படிவத்தினை வழங்கமுடியாது போயுள்ளது. |
| (ஆ) சபைக்கு சொந்தமான ஆதனங்களை குத்தகைக்கு வழங்கும் போது குத்தகை ஒப்பந்தத்தில் பிணை ஆவணம் பெறப்படவேண்டும் என கூறப்பட்டுள்ள போதிலும், அத்தகைய ஆவணம் அல்லது பிணைப்பணம் பெறப்படுவதில்லை. இதனால், குத்தகைக்கு சொத்துக்களை பெற்றவர்கள் குத்தகைப்பணம் செலுத்த தவறும் பட்சத்தில் சபையானது வருமானத்தை இழக்கவேண்டி நேரிடலாம். | சட்ட எற்பாடுகளுக்கு அமைய, செயற்படுத்தப்படவேண்டும். | சபைக்கு சொந்தமான சொத்துக்களை குத்தகைக்கு வழங்கும் போது குத்தகைப்பணத்தில் 50 % ஒப்பந்தத்தினை மேற்கொண்டு இரண்டு வாரங்களுக்குள் பெறப்படும். மிகுதித் தொகை ஆறு சம தவணைக் கட்டணங்களில் அறவிடப்படும். முதல் இரண்டு மாதங்களுக்கான தவணைப் பணத்தினை செலுத்த தவறும் பட்சத்தில் அவருடைய ஒப்பந்தம் முடிவுறுத்தப்படும். ஆதலால் சபை வருமானத்தினை இழக்க வேண்டிய நிலை ஏற்படமாட்டாது. பிணை ஆவணத்தினை சபையின் பெயருக்கு மாற்றி எழுதுதல் தொடர்பான செலவுகள் மேலதிகமாக ஏற்படும். |
| (இ) 1987 ஆம் ஆண்டின் 15 இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 154 ஆம் பிரிவின் பிரகாரம், குறித்த சில காணிகள் விற்பனை மீது 1% சதவீத விற்பனை வரி அறிவிடப்படவேண்டிய போதிலும், 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் விற்பனை செய்யப்பட்ட காணிகளின் மொத்த பெறுமதி ரூபா 333,254,236 தொகையில் வரியாக ரூபா 3,332,542 தொகையை அறவிட சபை நடவடிக்கையெடுத்திருக்கவில்லை. | 1987 ஆம் ஆண்டின் 15 இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 154 ஆம் பிரிவின் பிரகாரம், அறவிட நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். | காணிகள் பொது பகிரங்க ஏலவிற்பனையின் போது மட்டும் தான் காணி விற்பனைகள் மீது 1மூ விற்பனை வரியினை அறவிட முடியும். இது தொடர்பாக உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் கடிததப்பிரதி இணைக்கப்பட்டுள்ளது |

3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

3.5.1 சொத்துக்களை பதிவேட்டிற்கு உட்படுத்தாமை

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் இறுதி வரை சபைக்கு சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்களின் மொத்தப் பெறுமதி ரூபா 177,218,704 தொகையாக கணக்குகளில் காட்டப்பட்ட போதிலும், அசையும் மற்றும் அசையா சொத்துக்களை நிலையான சொத்துப் பதிவேடுகளில் பதிவதற்கு சபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துப் பதிவேடுகளில் பதிவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். | மீளாய்வாண்டின் இறுதியில் காணி கட்டடங்களின் மொத்தப் பெறுமதி ரூபா 177,218,704 ஆகும். இதனுள் ஏறக்குறைய 60%மானவை வீதிகளை புனரமைப்பு செய்வதன் ஊடாக ஏற்படும் மூலதன செலவினை உள்ளடக்கியுள்ளது. ஏனையவை காணி கட்டடங்களின் பெறுமதியாகும். எனவே அவற்றினை நிலையான சொத்துப் பதிவேடுகளில் பதிவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. |

3.5.2 பராமரிப்பு மற்றும் திருத்தங்களினை மேற்கொள்ளத் தவறியமை

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) பிரதேச சபையினால் பயன்படுத்தப்படுகின்ற சொத்துக்கள் மீதான பராமரிப்பு மற்றும் திருத்தங்கள் தொடர்பில் சபைக்கு சொந்தமான 01 ஊந்துருளி, 01 முச்சக்கரவண்டி, 01 உழவு இயந்திரம், 01 சிறிய ரக உழவு இயந்திரம், 01 JCB இயந்திரம் மற்றும் 01 Motor Grander இயந்திரம் போன்றவை 03 ஆண்டுகளுக்க மேலாக திருத்தம் செய்யக்கூடிய அல்லது திருத்தமுடியாத நிலையில் காணப்படுகின்றது. இவற்றை | திருத்துவதற்கு அல்லது ஏலத்தில் விற்பனை செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும். | சபையில் காணப்படும் சொத்துக்களில் திருத்தக் கூடியவற்றை திருத்துவதற்கும் அவ்வாறு அல்லாவிடில் அவற்றினை விற்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்வதற்கு இயந்திரப் பொறியியலாளர், கிழக்கு மாகாணம் அவர்களுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. |

| | | |
|---|---|---|
| திருத்துவதற்கு அல்லது ஏலத்தில் விற்பனை செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) பிரதேச சபையின் களஞ்சிய அறையில் பல்வேறுபட்ட சொத்துக்கள் மற்றும் இருப்பு பொருட்கள் பாவனைக்கு உகந்த மற்றும் பாவனைக்கு உதவாத பொருட்கள் என பலவகையான பொருட்கள் காணப்படுகின்ற போதிலும், அவற்றை அடையாளப்படுத்தி திருத்துவதற்கு அல்லது கழித்து விடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படாததுடன், இவ்வா றாக திருத்தம் செய்து பயன்படுத்தக்கூடிய பொருட்களை ஒழுங்குபடுத்தி பாதுகாப்பான முறையில் வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக் கவில்லை | நடவடிக்கைகள் முறையாக நடைமுறைப்படுத்தப்படவேண்டும் | பிரதேச சபையின் களஞ்சிய அறையில் காணப்படும் பலவேறுபட்ட இருப்புப் பொருட்களில் பயன்படுத்த கூடியவற்றை அடையாளம் கண்டு திருத்துவதற்கும் ஏனையவற்றை ஏலவிற்பனை மூலம் விற்பதற்கோ அல்லது அழித்து விடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. |

3.5.3 வருடாந்த பொருள் / இருப்பு மெய்மையாய்வு

மீளாய்வாண்டிற்கான வருடாந்த பொருள் / இருப்பு மெய்மையாய்வானது பிரதேச சபையினால் நியமிக்கப்பட்ட மூன்று உத்தியோகத்தர்கள் அடங்கிய மெய்மையாயவுக் குழுவினால் 2019 ஜனவரி 30, 31 மற்றும் பெப்ரவரி 01 ஆம் திகதி ஆகிய தினங்களில் நடைபெற்றுள்ளதுடன் இதற்கான கொடுப்பனவாக ரூபா 6,000 தொகையும் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. இவ் மெய்மையாய்வு தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) வருடாந்த பொருள் / இருப்பு மெய்மையாய்வு செய்வதற்காக நியமிக் கப்பட்ட உத்தியோகத்தர்கள் பொருட்களின் உண்மை இருப்பு நிலையை உறுதிப்படுத்தும் வகையில் இருப்பு பதிவேட்டுடன் ஒப்பிட்டு கணிப்பிடப்பட்டது என்பதை வெளிப்படுத்தும் வகையில் இருப்புபதிவேட்டில் அடையாள மிட்டு, உறுதிப்படுத்தி கையொப்பம் இடப்பட்டிருக்கவில்லை. | நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும் | மீளாய்வாண்டுக்கான வருடாந்த பொருள் ∴ இருப்பு மெய்யாய்வு செய்யும் போது அவர்கட்கு சமாப்பிக்கப்பட்ட திறைசேரி மற்றும் கணக்காய்வு 66 கழசஅ ற்கு அமைய இருப்பு உண்மையினையும் ஒப்பிட்டு சரி பார்த்த பின்னர் இருப்புப் பதிவேட்டுடன் ஒப்பிட்டு செவ்வை பார்க்கப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| | | ஆனால் இருப்புப் பதிவேட்டில் அவர்கள் தவறுதலாக ஒப்பமிட தவறியுள்ளனர். |
| (ஆ) மீளாய்வாண்டிற்கான வருடாந்த பொருள் / இருப்பு மெய்மையாய்வானது 2018 திசெம்பர் 31 ஆம் திகதியை அடிப்படையாக கொண்டு மேற்கொள்ள வேண்டும். மேலும், இத் திகதிக்கு பின்னர் நடைபெற்ற பெற்றுக்கொள்ளல் மற்றும் வழங்கள்ல்கள் தொடர்பில் சீராக்கங்கள் செய்யப்பட்டு இறுதி பொருள் இருப்பு கணிப்பிடப்படவேண்டிய போதிலும், இச்செயற்பாடுகள் தொடர்பில் கணிப்பிடுகள் கவனத்தல் கொள்ளப்படாது இருப்பு மெய்மையாய்வு மேற்கொள்ளப் பட்டுள்ளது. | வருடாந்த பொருள் / இருப்பு மெய்மையாய்வானது முறையாக மேற்கொள்ளப்படவேண்டும் | வருடாந்த பொருள் கணிப்பீடு செய்யும் போது மீளாய்வாண்டு 2018.12.31 ல் உள்ள மீதியினை அடிப்படையாக கொண்டு மேற்கொள்ளப்பட வேண்டும். எனினும் 31.12.2018 ற்கு பின்னர் பெற்றுக் கொள்ளப்பட்ட இருப்பு தொடர்பான விபரத்தினை கவனத்தில் எடுத்தல் வினைத்திறனுள்ளதாகும். |
| (இ) வருடாந்த பொருள் / இருப்பு மெய்மையாய்வுக் குழுவினால் சான்றுறுதி செய்யப்பட்ட பொது 47 ஆம் படிவத்தில் "S" என அடையாளமிடப்பட்டு சுட்டிக்காட்டப்பட்ட பொருட்கள் தொடர்பில் கணக்காய்வுத் திகதியான 2019 ஏப்பிரல் 30 ஆம் திகதியில் மெய்மையாய்வு செய்தபோது இவ்வாறு அடையாளமிடப்பட்ட பொருட்களின் எண்ணிக்கையில் வேறுபாடு காணப்பட்டுள்ளது. | வருடாந்த பொருள் / இருப்பு மெய்மையாய்வானது முறையாக மேற்கொள்ளப்படவேண்டும் | வருடாந்த பொருள் கணிப்பீட்டு குழுவினால் பொது 47 ஆம் படிவத்தில் "S" எனக்காட்டப்பட்ட பொருள் எண்ணிக்கை தொடர்பாக புதிதாக களஞ்சியத்தினை பொறுப்பேற்றுக் கொண்ட உததியோகத்தரால் உறுதிப்படுத்த முடியவில்லை. ஏனெனில் அவை எமது சபைக்குட்பட்ட பொது நூலகங்களில் இருப்பதாக காட்டப்பட்டுள்ளது. |
| (ஈ) வருடாந்த பொருள் / இருப்பு மெய்மையாய்வுக் குழுவினால் திறைசேரி மற்றும் கணக்காய்வு – 66 என்ற படிவத்தில் பயன்படுத்தப்படுகின்ற பொருட்கள் வெளிக்காட்டப்படவேண்டும். இருந்தும், இவ் மெய்மையாய்வுக்கு குழுவினால் மேற்படி படிவத்தில் வெளிப்படுத்தப்படவேண்டிய பொருட்கள் மற்றும் பொது 47 படிவத்தில் காட்டப்படவேண்டிய பொருட்கள் என பிரித்து மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. (உதாரணமாக) திருத்த முடியாத நிலையில் நீண்டகாலமாக பழுதடைந்த நிலையில் உள்ள 02 | வருடாந்த பொருள் / இருப்பு மெய்மையாய்வானது முறையாக மேற்கொள்ளப்படவேண்டும் | தொழில்நுட்ப ரீதியான பொருட்கள் திருத்த முடியாத நிலையில் காணப்படுகின்ற போது, அப்பொருட்களினை Gen 47 ல் காட்டப்டுவதற்கு முன்னர் அதனை திருத்த முடியாதுள்ளது என்பதனை உறுதிப்படுத்தி Technical report பெறப்பட வேண்டிய நிலை காணப்படுகின்றது. எனவே அதனை பெற்றுக்கொள்ளாமையினாலேயே திறைசேரி மறறும் கணக்கய்வு 66 என்ற படிவத்தில் காட்டப்பட்டுள்ளது. |

டிஜீட்டல் புகைப்படகருவிகளும் பவனையில் உள்ள கருவிகளாக கருதப்பட்டு மெய்மையாய்வில் வெளிக்காட்டப்பட்டள்ளது.

3.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

தெருவிளக்கு கொள்வனவு மற்றும் வழங்கல்

பிரதேச சபையானது மீளாய்வாண்டில் ரூபா 1,150,845 தொகைக்கு தமது அதிகார எல்லைக்குள் தெருவிளக்குகளை பொருத்துவதற்காக மின்சார பொருட்களை கொள்வனவு செய்தது. இச் செயற்பாடு தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) வீதிகளில் மின்விளக்குகளை பொருத்துவதற்கான தேவைகள் குறித்து மக்களிடமிருந்து முறைப்பாடுகள் மற்றும் கோரல்கள் குறைந்த அளவில் பெறப்பட்ட போதிலும், சபையில் 300 தெருவிளக்குகளை கொள்வனவு செய்வதற்கான அனுமதி பெறப்பட்டுள்ளது. மக்களினால் கோரப்பட்ட தேவைகளுக்கு ஏற்ப இக் கொள்வனவுகள் மேற்கொள்ளப்படவேண்டும். | இச்செயற்பாடுகள் தொடர்பாக முறையான திட்டமிடல் ஒன்று மேற்கொள்ளப்பட்டு சேவைகளை மக்களுக்கு வழங்கவேண்டும் | பிரதேச சபையின் நிர்வாகமானது மக்களால் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதியால் ஆளப்பட்டு வருகின்றது. தவிசாளரே நிறைவேற்று அதிகாரியாவர். எனவே 11 வட்டாரங்களிலும் இருந்து மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதில் பொறுப்பாக உள்ளனர். ஆதலால் அவர்கள் தமது வட்டாரங் களுக்கு தேவையான தெருவிளக்கு தொடர்பாக கணக்கெடுப்பிற்கு அமையவே முதற்கட்டமாக 300 தெருவிளக்குகளை கொள்வனவு செய்யப்படுவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) வீதிகளில் பொருத்தப்படுகின்ற 65 Wattage மின்குழிழ்கள் ஒவ்வொன்றும் ரூபா 1,450 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. இருந்தும், மட்டக்களப்பு மாநகர சபை மற்றும் | முறையான திட்டமிடல் ஒன்றை மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் | வீதிகளில் பொருத்தப்படுகின்ற தெரு விளக்குகள் 65று மின்குமிழ்கள் பயன்பாட்டு |

| | | |
|---|---|---|
| ஏனைய பிரதேச சபைகளுடன் ஒப்பிடும் போது தங்கள் பிரதேச சபையினால் கொள்வனவு செய்யப்படுகின்ற மின்குமிழ்களின் மின்வலுவும் விலையும் அதிகளவிலே காணப்படுகின்றது. | | அடிப்படையில் வெளிச்சம் கூடியவையாக காணப்படுகின்றன. ஏனெனில் இதனை 4 மின்தூண்களுக்கு ஒன்று வீதம் பயன்படுத்தக்கூடியதாக காணப்படுகின்றது. இதனுடைய பெறுமதி கூடியதாக காணப்பட்டாலும் அதனுடைய பாவனைக் காலம் என்பன கூடுதலாக காணப்படுகின்றது. |
| (இ) வீதிக்கான விளக்குகளை கொள்வனவு செய்வதற்கு சபையினால் ஒவ்வொரு வருடமும் வரவு செலவுத்திட்டத்தில் ஒதுக்கப்படுகின்ற நிதியில் 95% சதவீதமான நிதி செலவு செய்யப்படுவதுடன், மீளாய்வாண்டில் சபையின் தவிசாளர் மற்றும் உறுப்பினர்களின் தனிப்பட்ட விருப்பங்களின் அடிப்படையில் இவை கொள்வனவு செய்யப்பட்டு பொருத்தப்பட்டுள்ளது. | முறையான திட்டமிடல் ஒன்றை மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் | எமது மக்களின் முறைப்பாடுகள் உறுப்பினர்கள் மூலம் தெரிவிக்கப்டுகின்ற நிலைமை காணப்படுகின்றது. பொது மக்கள் தற்போது இரவு வேளை நடமாடும் போது இருள் நிலைமை, களவு மற்றும் ஏனைய பிரச்சினைகள் காரணமாக பயப்படுவதாக தெரிவிக் கின்றார்கள். இதனாலேயே முதற்கட்டமாக நிறைவேற்றப்பட்டுள்ளது. மேலும் மக்களு க்கு தேவையான வீதி தொடர்பான பிரச்சினைக்கு சம்பந்தப்பட்ட அமைச்சர் களிடம் தொடர்பு கொண்டு நிதியினை பெற்று புனரமைப்பு வேலைகளையும் மேற்கொண்டு வருகின்றோம். |
| (ஈ) கடந்த இரு ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது 2016 ஆம் மற்றும 2017 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 658,000 மற்றும் ரூபா 584,000 தொகைக்கும் மீளாய்வாண்டில் ரூபா 1,150,845 தொகைக்கும் 2019 ஆம் ஆண்டின் ஏப்பிரல் மாதம் நிறைபெறுவதற்கு முன்பு ரூபா | முறையான திட்டமிடல் ஒன்றை மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் | 2019ம் ஆண்டின் ஆரம்ப காலப்பகுதியில் தெருவீதி விளக்குகள் பொருத்துவது தொடர்பான நடவடிக்கைகள் மட்டுமல்ல வீதி அபிவிருத்தி தொடர்பான |

| | | |
|---|---|---|
| 753,938 தொகைகக்கும் வீதி விளக்குக்கு தேவையான பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. சபை யினால் மேற்பார்வை செய்யப்படவேண்டிய அபிவிருத்தி செயற்பாடுகளின் ஒன்றான வீதி விளக்குகளை கொள்வனவு செய்யும் நடவடிக்கையானது துரிதகெதியில் நடை பெறுகின்றமை அவதானிக்க கூடியதாக உள்ளது. | | செயற்றிட்டங்கள் தொடர்பாக அமைச்சர்களுடன் தொடர்பு கொண்டு நிதியினை பெற்று அபிவிருத்தி திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின் றன. (உ-ம்) கோட்டைக்கல்லாறு வீதி அபிவிருத்திட்டம் 5ஆ பெறப்பட்டுள்ளது. மற்றும் ஏனைய திட்டங்களுக்கான திட்ட மொழிவுகள் சம்பந்தப்பட்டவர்களுக்க அனுப்பிவைக்கப்பட்டுள் ளது. |

3.7 பெறுகை

3.7.1 பெறுகைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான பெறுகைள் திட்டமானது பிரதேச சபையினால் வழங்கல்கள் மற்றும் சேவைகள் செயற்பாடுகளுக்காக தயாரிக் கப்பட்டிருக்க வேண்டும். இருந்தும், சபையினால் வழங்கல்களுக்காக ஒரு பெறுகைகள் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்காத துடன், சேவைகளுக்காக சபையினால் தயாரிக்கப்பட்ட பெறுகைகள் திட்டமானது தயாரிக்கப்பட்டதற்கான அடிப்படை ஆவணம், முன்மொழிவுகள், உள்ளூராட்சி மன்றங்களின் 4 வருட அபிவிருத்தி திட்டங்களின் முன்மொழிவுகளின் உள்ள சேவைகள் என்பன பின்பற்றப்படாது திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது | சுற்றறிக்கைகளுக்கு அமைவாக பெறுகைகள் திட்டமொன்றை வருடாந்தம் செயற்படுத்த வேண்டும் | மீளாய்வாண்டுக்கான பெறுகைத் திட்டமானது பொருட்களுக்கு தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படவில்லை. ஆனால் சேவைகளுக்கான பெறுகைத்திட்டமானது தயாரிக்கப் பட்டுள்ளது. அதனை தயாரிக்கும் போது தற்போது பொதுமக்களால் சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடுகளுக்கு அமையவும் மக்கள் பிரதிநதிகளின் ஆலோசனைக்கு அமைய திட்டங்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டு தயாரிக்கப்பட்டுள்ளது. எனவே தொடர்ந்து வரும் ஆண்டுகளில் இதனை சிறப்பாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. |

3.7.2 வழங்கல்கள் மற்றும் சேவைகள்

(அ) குப்பைகளை சேகரிக்கும் பிளாஸ்டிக் கொள்கலன்கள் கொள்வனவு

மீளாய்வாண்டில் சபை நிதி மற்றும் இரண்டாம் தர சுகாதார திட்டத்தின் கீழ் குப்பைகளை சேகரிக்கும் பிளாஸ்டிக் கொள்கலன்கள் கொள்வனவு ரூபா 486,616 தொகைக்கு 71 கொல்கலன்கள் கொள்வனவு செய்யப்பட்டு வினியோகிக்கப் பட்டமை தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) இரண்டாம் தர சுகாதார திட்டத்தின் கீழ் ரூபா 150,000 தொகை குப்பைகளை சேகரிக்கும் கொல்கலன் மற்றும் மீள் பாவிக்கக்கூடிய குப்பைகளை சேகரிக்கும் பைகளை அரச நிறுவனங்கள் மற்றும் பொதுமக்களுக்கு வினியோகிக்கும் பொருட்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட போதிலும், சபையானது ரூபா 143,928 தொகைக்கு 21 குப்பைகளை சேகரிக்கும் பிளாஸ்டிக் கொள்கலன் மாத்திரம் கொள்வனவு செய்ப்பட்டு அரச நிறுவனங்களுக்கு மாத்திரம் வழங்கப்பட்டுள்ளது. | முறையான திட்டமிடல் ஒன்றை மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் | இரண்டாம் தர சுகாதார திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட குப்பைகள் சேகரிக்கும் கொள்கலன் மற்றும் மீள் பாவிக்கக்கூடிய பைகளை பொதுமக்களுக்கு வழங்குவதில் சிரமங்கள் காணப்பட்டது. ஏனெனில் குறைந்தளவான கொள்கலன்களை எவ்வாறான பொதுமக்களுக்கு வழங்க வேண்டும் என்று தெரிவு செய்வது என்பது கஷ்டமான செயற்பாடாக காணப்பட்டமையினால் அரச நிறுவனங்களுக்கு மட்டும் வழங்கப்பட்டுள்ளது. |
| (ஆ) சபை நிதி மூலம் யூன் மாத தீர்மானம் ஒன்றிற்கு அமைய முன்மொழிவுகள் எதுவுமின்றி மேலும் 50 குப்பைகளை சேகரிக்கும் பிளாஸ்டிக் கொள்கலன்களை கொள்வனவு செய்து அரச, பொது நிறுவனங்கள் மற்றும் மதஸ்தலங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. | முறையான திட்டமிடல் ஒன்றை மேற்கொண்டு பொதுமக்களுக்கு சேவைகளை வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் | திண்மக்கழிவுகள் கூடுதலாக கிடைக்கும் இடங்கள் அடையாளம் காணப்பட்டு அவற்றினை இலகுவாக சேகரிப்பதற்கு சபையினால் கொள்வனவு செய்யப்பட்ட 50 பிளாடிக் கொள்கலன்கள் அரச, பொது மற்றும் மதஸ்தலங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. |
| (இ) சபையினால் கோரப்பட்ட கொல்கலனின் அளவு (உயரம் - 1040mm x அகலம் 495mm) என கேள்வி மனுவில் காட்டப்பட்ட போதிலும், கொள்வனவு செய்யப்பட்ட கொல்கலனின் அளவு (உயரம் - 980mm x அகலம் 480mm) காணப்பட்டுள்ளது. | பொருட்கள் மற்றும் சேவைகள் தொடர்பில் கொள்வனவு மற்றும் சேவைகளின் பின்னரான ஆய்வுகள் மெற்அகாள்ளப்பட வேண்டும். | சபையினால் 110Lt, 150Lt & 200Lt கொள்ளளவுடைய நீளம் 500மிமீ மற்றும் அகலம் 950 மி.மீ. கொண்ட கொள்கலன்கள் கோரப்பட்டுள்ளன. |

| | | |
|---|---|---|
| | | எனினும் குறிப்பிட்ட வழங்குனரால் எம்மால் கோரப்பட்ட கொள்ளளவு(200LT) உடைய மேலதிக வைநஅ ஒன்றும் குறிப்பிடப்பட்டிருந்தமையினால் அது தரமானதாகவும் விலைகுறைந்ததாகவும; காணப்படமையினால் அவற்றினை கொள்வனவு செய்வதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டது. அதற்கமைய அவரால் வழங்கப்பட்ட கொள்கலன்கள் கொள்ளளவு 200டுவு காணப்படுகின்றது. ஆனால் அளவுத்திட்டம் சிறிது வேறுபாடாக காணப்படுகின்றது. |
| (ஈ) பிரதேச சபையினால் மீளாய்வாண்டில் மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடையின் கீழ் தேற்றாத்தீவு பகுதியில் குடிநீர் குழாய்களை பொருத்தும் வகையில் மட்டக்களப்பு பிராந்திய தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபைக்கு ரூபா 1,494,167 தொகை 2018 ஒக்கோடபர் மாதத்தில் கொடுப்பனவு செய்யப்பட்ட போதிலும், கணக்காய்வுத் திகதியான 2019 ஏப்பிரல் 31 ஆம் திகதிவரை பூர்த்தியாக்கப்பட்டிருக் கவில்லை. இதனால் அப்பகுதியில் வாழும் மக்கள் குடிநீரால் அசௌகரியங்களை எதிர்கொள்ளவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. | உரிய காலத்திற்குள் சேவையை மக்களுக்கு வழங்க தேவையான திட்டமிடல்களை மேற்கொள்ள வேண்டும் | PSDG திட்டத்தின் மூலம் 2018 ம் ஆண்டு தேற்றாத்தீவு குடியிருப்பு கிராமத்தில் குடிநீர் விநியோக திட்டம் முடிவுறுத்தப்படவில்லை. இதற்கான காரணம் குளத்தின் ஊடாகவே அக் கிராமத்திற்கு குழாய் பதித்து கொண்டு செல்ல வேண்டும் ஆனால்நீர் மட்டம் கூடுதலாக காணப்படுவதால் குழாய்களை பதித்து நடைமுறைப்படுத்த முடியாதுள்ளது. தற்போது கோடைகாலமாகையால் நீர் மட்டம் குறைந்து வருவதால் வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளது என்பதனை தெரிவித்துக்கொள்கின்றேன். |

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(2) உப பிரிவிற்கமைய வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக் கப்பட்டிருக்கவில்லை. | 2018ம் ஆண்டின் 19 ஆம் இலக்க கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(2) உப பிரிவுக்கமைய செயற்பட வேண்டும். | வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதிக்கூற்றுடன் சமர்ப்பிக்கப்ட வேண்டும் என்று குறிப்பிட்ட விடயம் சம்பந்தமாக தெளிவில்லாமையினால் சமர்ப்பிக்கப்படவில்லை. எனவே தொடர்ந்து வரும் காலங்களில் தயாரித்து சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

4.2 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் சபையில் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் நடைபெற்றிருக்கவில்லை | முறையாக திட்டமிடப்பட்டு உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் | தற்போது உள்ளக கணக்காய்வக்கு பொறுப்பாக பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டு உள்ளக கணக்காய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்படடுள்ளது. |

4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் சபையினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டு குழுக் கூட்டங்கள் நடைபெற்றிருக்கவில்லை | முறையாக திட்டமிடப்பட்டு உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | சபையினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கூட்டங்கள் நடாத்தப் படுவதற்கான ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன. |

5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்
--------------------------------------------------------------

கீழ்வரும் கட்டுப்பாட்டுவிடயங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புகள் | விசேட கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) வருமான முகாமைத்துவம் | வருமான நிலுவைகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | சுற்றறிக்கைகள் மற்றும் சட்ட எற்பாடுகளுக்கமைய செயற்படுத்தப்பட வேண்டும் | தங்களால் குறிப்பிட்ட வருமான முகாமைத்துவம் ,பாதீட்டுக் கட்டுப்பாடு மற்றும் நிலையான சொத்துக் கட்டுப்பாடு என்பனவற்றின் மீது முழுமையான கவனம் செலுத்தப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. |
| (ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு | பாதீடு தயாரிக்கப்படும் போது கடந்த கால உண்மையான செலவுகள் கவனத்தில் கொள்ளப்படுதல் வேண்டும். | | |
| (இ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு | i) நிலையான சொத்துப் பதிவேடு பேணப்படுதல் வேண்டும். (ii) சபையில் பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்படும் நிலையான சொத்துக்களை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | | |